Rajapalayam. But in his reply the Hon. Minister made reference only to the eight-anna crop. So many other details had not been furnished at that time. So, I now request the Hon. Minster for Food to ask for fuller details and supply them to me.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கவனஈர்ப்புத் தீர்மானத்தின் மீது அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த உறுப்பினர் மட்டும் ஓரிரு கேள்விகள் கேட்க அனுமதிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவர்கள் குறிப்பிட்ட விஷயம் இதற்குச் சம்பந்தமில்லாதது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆகவே மற்ற உறுப்பினர்கள் கேட்பதற்கு உரிமை இல்லை.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி : பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் சார், அந்த மாவட்டத்திலேயிருந்து வந்திருப்பவர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷனுக்கு இடம் இல்லை. எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவராக யிருந்தாலும் அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த உறுப்பினர் மட்டும்தான் வினா கேட்பதற்கு உரிமை இருக்கிறது. மற்றவர்களுக்கு உரிமை இல்லை.

5. அரசினர் தீர்மானங்கள்.

(i) மதிப்பீட்டுக் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து அரசினர் தீர்மானங்கள். மதிப்பீட்டுக் குழுவிற்கு பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது பற்றிய தீர்மானத்தை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் முன்மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "தமிழ் நாடு சட்டப்பேரவை விதிகளைச் சேர்ந்த 164-வது விதியின்கீழ் 1968-69-ம் ஆண்டுக்குரிய மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும் படி பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் தேதியன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ii) மதிப்பீட்டுக் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைமை வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 20-3-68 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 21-3-68 வியாழக்கிழமை காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 22-3-68 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்குள் கொடுக்கலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினைந்திற்கு மேற்படுமாயின் 26-3-68 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

5. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ii) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு பதினைந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது பற்றிய தீர்மானத்தை மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சரவர்கள் முன்மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "தமிழ் நாடு சட்டப்பேரவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியின்கீழ் 1968-69-ம் ஆண்டுக்குரிய பொதுக் கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி பதினைந்து உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் தேதியன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது

3. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(iii) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைமை வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 20-3-68 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 21-3-68 வியாழக்கிழமை காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 22-3-68 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்குள் கொடுக்கலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினைந்திற்கு மேற்படுமாயின் 26-3-68 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

6. 1968-69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 25—ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து 1968-69-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம். 1968-69-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு. 7-ஆம் நாள்—**மானியக் கோரிக்கை எண் 25**, மாண்புமிகு அரிசன நல செய்தித்துறை **அமைச்சர் அவர்கள்.**